**வரையறுக்கப்பட்ட இலங்கை உருக்கு கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளின் காரணமாக மில்லேனியம் சிட்டி குடியிருப்பாளர்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்கள் தொடர்பான விஷேட கணக்காய்வு – 2015**

## 1. பின்புலம் மற்றும் தற்போதைய நிலை

### 1.1 உருக்குத் தொழிற்சாலை

1957 இன் 49 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில்களை கூட்டிணைக்கும் அதிகாரச்சட்டத்தின் கீழ் சீனக் குடியரசிலிருந்து இலங்கை அரசாங்கத்திற்கு கிடைத்த நன்கொடையாக இந்த தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது.

உள்நாட்டு ரீதியில் தேவையான இரும்பு மற்றும் உருக்குகள் இந்த தொழிற்சாலையின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன் கடந்த காலங்களில் பொது முயற்சிகளை மீளமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் நட்டம் பெறுகின்ற நிறவனமொன்றாக இந்த நிறுவனமும் 1996 ஆம் ஆண்டின் போது தனியார்மயப்படுத்தப்பட்டது. அதன் பின்னரும் அந்த தனியார் உரிமை சில சந்தர்ப்பங்களில் மாற்றங்களுக்குள்ளாகி தற்போது உள்நாட்டு முதலீட்டாளர் ஒருவரினால் தனியார் கம்பனியொன்றாக நடாத்திச் செல்லப்படுகின்றது.

ஆரம்பத்தின் போது நகர எல்லையில் எனினும் முன்னர் மக்கள் குடியிருப்பற்ற 182 ஏக்கர் அளவிலான காணியில் இந்தத் தொழிற்சாலைக்குரியதாக இருந்ததுடன் தொழிற்சாலைகள் காணியின் எல்லையிலிருந்து ஒதுக்கமாக 1 கிலோமீற்றர் அளவிலான கூறொன்று பாதுகாப்பு ஒதுக்கப்பட்டிருந்தது. மேலும் தொழிற்சாலைக் காணியில் சுற்றாடலுக்கு அமைய பாதுகாப்பதற்கு மரங்கள் செடிகள் நடப்பட்டிருந்ததுடன் உள்ளே நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தேக்கத்தின் மூலம் சுற்றாடல் சமநிலைத் தன்மை மேலும் அதிகரித்திருந்தது. அதற்கு இணையாக தொழிற்சாலைக்கு அருகிலுள்ள பாதுகாப்பு பிரதேசத்தின் மூலம் தொழிற்சாலையிலிருந்து வெளிச் சுற்றாடலுக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் மேலும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

தற்போதைய உரிமையின் கீழ் முதலீட்டுச் சபையில் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டமொன்றாக 2011 ஆம் ஆண்டின் மே 30 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் இக் கைத்தொழிலை நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய தொழிற்சாலையாக நவீனமயப்படுத்தி உற்பத்தி நடவடிக்கைகள் 2012 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.1.1 உருக்கு ஆலையின் உரிமை மாற்றத்துடன் தொழிற்சாலையில் ஏற்பட்ட மாற்றங்கள்

1961 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட உருக்கு தொழிற்சாலை அரசாங்க கூட்டுத்தாபனமாகவும், அதன் பின்னர் 1993 ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்குரிய தனியார் கம்பனியொன்றாகவும் நடாத்திச் செல்லப்பட்டதன் பின்னர் 1996 ஆம் ஆண்டின் போது கொரிய ஹெவி இன்டஸ்ட்ரீஸ் என்ட் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பனி லிமிடெட் நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. அதன் பின்னர் தொழிற்சாலையின் உரித்து வேறொரு தனியார் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

தொடர்த்தேர்ச்சியாக உரிமை மாற்றங்களுக்கு உட்பட்டு 2010 ஆம் ஆண்டின் போது தற்போதைய உரிமைத்துவத்தால் ''வரையறுக்கப்பட்ட இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம்'' என்ற பெயரில் கூட்டிணைக்கப்பட்டு உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் போது இந்த கைத்தொழில் பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டு இறுதியில் உருக்குக் கம்பி உற்பத்தி செய்வதற்கு மேலதிகமாக கல்வனைஸ் குழாய் உற்பத்தி வரை முன்னறியிருந்தது. அதன் போது நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு உற்பத்தி முறை மாற்றப்பட்டிருந்ததுடன் விஷேடமாக மின்சாரத்திற்குப் பதிலாக நிலக்கரி, கணிய எண்ணெய் போன்ற சக்தி மூலங்களைப் பயன்டுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தமையினால் குறிப்பிடக்கூடிய அளவில் இதிலிருந்து வெளியாகும் புகை அதிகரித்திருந்தது. இவ்வாறு

பல்வேறு அபிவிருத்திகளின் மூலம் தொழிற்சாலையின் இயலளவை அதிகரிப்பதற்கு முடியுமாக இருந்ததுடன் அதன் மூலம் நாட்டில் உள்நாட்டு உருக்குக்கம்பி மற்றும் குழாய்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான பங்களிப்பொன்று வழங்கப்பட்டிருந்தது.

### 1.1.2 கைத்தொழில் செயற்திட்டத்தை அங்கீகரித்தல்

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய தொழிற்சாலையொன்றாக இந்த தொழிற்சாலையில் கல்வனைஸ் குழாய் கைத்தொழிலை ஆரம்பிப்பதற்கு 2008 இன் 14 ஆம் இலக்க தந்திரோபாய அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் முதலீட்டுச் சபையின் அங்கீகாரத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் இவ்வாறான தொழிற்சாலையை நடாத்திச் செல்வதற்காக பெறப்படவேண்டிய சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் சுற்றாடல் அதிகாரசபையின் மூலம் 2013 நவம்பர் 20 முதல் 2014 நவம்பர் 19 வரையான காலப்பகுதிக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் முதலீட்டுச் சபை செயற்திட்டங்களிற்காக முதலீட்டுச் சபையினால் விநியோகிக்கப்பட வேண்டிய சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வது தொடர்பாக தற்போதைய தொழிற்சாலையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறிப்பிடப்பட்டு அவற்றை சரிசெய்வதற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் குறிப்பிடப்பட்ட சில பணிகள் சீராக்கப்படாதிருந்ததுடன் முதலீட்டுச் சபையின் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளலும் தொடர்ந்தும் தாமதிக்கப்பட்டிருந்தது.

## 1.2 மில்லேனியம் சிட்டி வீடமைப்புத் திட்டம்

இலங்கை முதலீட்டுச் சபையில் அங்கீகரிக்கப்பட்ட இன்னுமொரு செயற்திட்டமாக மில்லேனியம் சிட்டி வீடமைப்புத் திட்டம் 1999 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த வீடமைப்புத் திட்டத்தில் 97.3 ஏக்கரில் 1575 வீடுகளை நிர்மாணிப்பதற்கு ஆரம்பமாக திட்டமிடப்பட்டிருந்ததுடன் அது 06 வலயங்களை உள்ளடக்கியிருந்தது. இந்த செயற்திட்டம் அத்துறுகிரிய உருக்கு ஆலையைச் சுற்றி அமைந்துள்ள பாதுகாப்பு பிரதேசத்தையும் உள்ளடக்கியதாக பரவலாக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த வீடமைப்புச் செயற்திட்டத்தில் வீடுகள் A, B, C என 3 வகைகளை உள்ளடக்கியிருந்ததுடன் அது ஒரு தனிவீடு இரண்டு மாடிகள் என மத்திய தர வீடமைப்பு உத்தேசத்திட்டமாக வடிவமைக்கப்பட்டிருந்தது. உருக்கு ஆலையின் எல்லை முடிவில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் திட்டம் ஒரு மாடியாக வரையறுக்கப்பட்டிருந்ததுடன் அது தொழிற்சாலையின் தாக்கத்தைக் குறைப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கையொன்றாக தீர்மானிக்கக் கூடியதாக இருந்தது. இந்த நிலையின் கீழ் முதலீட்டுச் சபையின் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டமொன்றாக வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் உரிய உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசமான முன்னைய கடுவெல பிரதேச சபையின் அங்கீகாரத்துடனும் மேற்பார்வையின் கீழும் இந்த நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2.1 மில்லேனியம் சிட்டி வீடமைப்புத் திட்டத்தை அங்கீகரித்தல்

இது தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு இருந்தன.

(அ) தொழிற்சாலையின் பாதுகாப்பு காணியையும் உள்ளடக்கியதாக அதற்கு அண்மித்ததாக ஆரம்பிக்கப்பட்ட இந்த வீடமைப்பு செயற்திட்டம் தொடர்பான ஆரம்ப ஆய்வின்போது சுற்றாடல் தாக்கமொன்று ஏற்படக்கூடிய நிலைமையொன்று தொடர்பாக போதியளவில் கவனம் செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இந்த தொழிற்சாலை முதன் முதல் ஆரம்பிக்கும் போதே அவ்வாறான கைத்தொழிலுக்கு கட்டாயமாக ஏற்படுத்தப்பட வேண்டிய பாதுகாப்புபிரதேசமொன்றின் தேவையினை இனங்கண்டு அதற்குத் தேவையான இடவசதிகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், இந்த வீடமைப்பு செயற்திட்டத்தை அங்கீகரிக்கும் போது தொழிற்சாலைக்காக அவ்வாறான

பாதுகாப்புப்பிரதேசமொன்றின் தேவை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை.

(ஆ) இந்த செயற்திட்டத்திற்காக முன்னைய இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனத்திற்குரிய அந்த பாதுகாப்பு பிரதேசத்தில் 97.3 ஏக்கர் காணி அளவையும் கையேற்று தொழிற்சாலையின் எல்லையின் அருகிலிருந்து உரிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதன் போது தொழிற்சாலையின் எல்லையின் அருகில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் (சுற்றாடல் அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட பிரகாரம்) ஒரு மாடி வீடாக இருக்க வேண்டியதாக தீர்மானிக்கப்பட்டு அதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் 1998 ஒக்தோபர் 28 ஆந் திகதி இந்த வீடமைப்புத் திட்டம் தொடர்பாக நடைபெற்ற வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் அவதானிப்பு வேலைக் குழுவின் அறிக்கையின் ‘2’ ஆம் பந்தியின் பிரகாரம் வரையறுக்கப்பட்ட இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனத்தின் எதிர்கால அபிவிருத்திருத்தின் போது இந்த வீடமைப்பு செயற்திட்டம் பிரச்சினைகளுக்குரியதாக இருக்குமென அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

விடயங்கள் அவ்வாறிருக்கும் போது இந்த செயற்திட்டத்தின் ஆரம்ப சுற்றாடல் அறிக்கைக்காக (IEE) முழுமையான அங்கீகாரம் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் தொழிற்சாலையின் தாக்கம் அதிகமாகக் காணப்பட்ட வலயகத்தின் 05 ஆம் இலக்க பகுதியில் வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பிக்கும் போது இலங்கை முதலீட்டுச் சபை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு போன்ற நிறுவனங்களினால் எதிர்காலத்தின் போது இந்த தொழிற்சாலையில் மேற்கொள்ளக்கூடிய விரிவுபடுத்தல்கள் அல்லது அபிவிருத்தி நடவடிக்கைகளினால் இந்த செயற்திட்டத்திலிருந்து தொழிற்சாலைக்கு அருகாமையிலுள்ள வலயங்களில் குடியிருப்பவர்களுக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் தொடர்பாக போதிளயவான கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை.

## 2. கணக்காய்வின் அடிப்படை

முன்னர் இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம் என்ற பெயரில் பாரிய கைத்தொழிலாக ஆரம்பிக்கும் போது அதற்குரிய சுற்றாடல் தாக்கங்களைக் குறைப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. எனினும் 1999 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்ட மில்லேனியம் சிட்டி வீடமைப்புத் திட்டத்திற்குரிய வீடுகள் இந்த தொழிற்சாலைக்கு அருகிலுள்ள பாதுகாப்புப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட காரணத்தால் வீடமைப்பு உத்தேசத்திட்டத்தின் வலய இலக்கம் 05 இற்குரிய வீடுகளில் குடியிருப்பவர்களுக்கு அடிக்கடி இந்த தொழிற்சாலை தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகளைச் செய்வதற்கு ஆரம்பித்திருந்தனர். ஆரம்பமாக அதிக இரைச்சல் மற்றும் புகை காரணமாக இந்த குடியிருப்பாளர்களின் அன்றாட வாழ்க்கைக்கு கவனத்தில் கொள்ளக்கூடிய தாக்கமொன்று ஏற்படுவதாக அந்த முறைப்பாடுகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இவ்வாறான பிரச்சினைகளின் போது ஆரம்பமாக செயற்படுத்தப்பட வேண்டிய நிறுவனமான இந்த செயற்திட்டத்தை அங்கீகரித்தல் மற்றும் தற்போது கட்டுப்படுத்துகின்ற முதலீட்டுச்சபை, சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பாக முன்னிற்க வேண்டிய மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் உரிய வீடமைப்புத் திட்டம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கடுவெல மாநகர சபை போன்ற சில நிறுவனங்கள் சிலவற்றின் நடவடிக்கைகளையும் பொறுப்புக்களையும் கவனத்தில் கொண்டு இந்த உத்தேச வீடமைப்புத் திட்டத்தின் குடியிருப்பாளர்களுக்கும் சுற்றாடலுக்கும் தாக்கமளிக்கின்ற பிரச்சினைகள் தொடர்பாக இந்த நிறுவனங்களினால் நடவடிக்கை எடுக்கப்பட்ட முறைகள் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

## 3. அவதானிப்புக்கள்

### 3.1 புதிய கல்வனைஸ் உற்பத்திப் பிரிவை ஆரம்பித்தல்

2008 இன் 14 ஆம் இலக்க தந்திரோபாய அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் கீழ் முதலீட்டுச் சபையின் அங்கீகாரத்துடன் புதிய கல்வனைஸ் குழாய் உற்பத்திப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டதுடன் அதற்குரிய வீடமைப்புத் திட்டத்தின் குடியிருப்பாளர்களின் எதிர்ப்பு தோன்றியிருந்தது. அந்த எதிர்ப்பிற்கு தொழிற்சாலையிலிருந்து பகல் மற்றும் இரவு வேளைகளில் அதிக ஒலியொன்று எழப்படுவதாகவும் இந்த உற்பத்திப் பிரிவின் மூலம் வெளிப்படுகின்ற புகை மற்றும் அதிக சத்தம் அந்தப்பகுதி குடியிருப்பாளர்களின் குடியிருப்பதற்கு இடையூராக இருக்கின்றதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் தொழிற்சாலையிலிருந்து பகல் மற்றும் இரவு காலங்களில் ஏற்படுகின்ற அதிக சத்தத்தை கட்டுப்படுவத்துவதற்காக முதலீட்டுச் சபை மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மூலம் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டிருந்தன.

இலங்கை முதலீட்டுச் சபையின் கருத்துரை
''ஏற்றுக்கொள்ளப்படுகின்றது''

### 3.2 தொழிற்சாலையின் செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள்

தொழிற்சாலையின் செயற்பாடுகளின் காரணமாக உருவாகின்ற ஒலியின் அளவு தொடர்பாக தொழிற்சாலையினதும் முறைப்பாட்டுத் தரப்பினரில் ஒரு பகுதியினருடனும் பகல் மற்றும் இரவு காலங்களில் எமது பதவியணியினர்கள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுடன் 04 நாட்கள் அவதானிப்புக்கள் மேற்கொண்டிருந்தன. அதன் போது தொழிற்சாலையின் வளவுஉட்பட தொழிற்சாலையின் தாக்கம் ஏற்பட்டுள்ள வீடமைப்புத் திட்டத்திற்குரிய வலயமும் பரீட்சிப்பிற்கு உள்ளாக்கப்பட்டிருந்தன. அந்த பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் பின்வருமாறு இருந்தன.

(அ) 2015 யூலை 13 ஆந் திகதி பகல் நேரத்தின் போது எங்களால் தொழிற்சாலை சூழல் அவதானிப்பிற்குள்ளாக்கப்பட்டிருந்ததுடன் அதில் வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் அருகிலுள்ள குடியிருப்பாளர்களுக்கு ஏற்படுகின்ற இடையூறுகளைக் குறைப்பதற்காக தொழிற்சாலையின் முகாமைத்துவத்தினால் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- i. கல்வனைஸ் குழாய் போடப்படுகின்ற இடங்களில் இரும்புகளுக்குப் பதிலாக மரப் பலகைகளை பயன்படுத்துதல்.
- ii. இரும்புத் திருகைக்குப் பதிலாக நைலோனால் தயாரிக்கப்பட்ட திருகைகளைப் பயன்படுத்துதல்.
- iii. இரும்புக் குழாய் அடுக்கப்படுகின்ற அனேக இடங்களில் நீர்தடாகத்தை பயன்படுத்துதல்.
- iv. தொழிற்சாலைக் கட்டிடத்தின் சுவருக்கும் கூரைக்குமிடையே உள்ள மில்லேனியம் சிட்டி வீடமைப்புத் திட்டத்தின் வலயம் 05 இல் அமைந்துள்ள திசையில் உள்ள சுவரில் காணப்பட்ட ஏனைய இடைவெளிகளை செங்கற்களைப் பயன்படுத்தி நிரந்தரமாக மறைத்தல்.
- v. தொழிற்சாலையின் 05 ஆம் வலயத்திறகுத் திறக்கப்பட்டுள்ள யன்னல்களை நிரந்தரமாக மூடுதல்.
- vi. தொழிற்சாலையின் கதவுகளை எந்நேரமும் மூடிவைத்தல் மற்றும் கவுகளுக்காக ஒலிகள் தெறிப்பதை இழிவுப்படுத்துவதற்காக ஒலி உறிஞ்சல் பொருட்களைப் பயன்படுத்துதல்.
- vii. தொழிற்சாலையில் ஒலி உருவாகின்ற இடங்களில் ஒலி உறிஞ்சும் சாதனங்களை வைத்தல்.
- viii. தொழிற்சாலையின் சுற்றுவட்ட மதிலை மேலும் உயர்த்தி அமைத்தல்.

ix. உரிய பிரகாரம் கல்வனைஸ் குழாய் உற்பத்தி செய்யப்படுகின்றதா என பரீட்சிப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற காற்றுப்பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்ற முறைமை மாற்றப்பட்டமையினால் முன்னர் ஏற்பட்ட அதிக இரைச்சலினை இழிவுபடுத்துவதற்கான நடவடிக்கை எடுத்தல்.

x. தொழிற்சாலையின் வலயம் 05 இன் இருபக்கமும் உள்ள சுவர் முழுமையாக மறைக்கப்பட்டமையினால் ஊழியர்களுக்கு ஏற்படுகின்ற அதிக வெப்பத்தைக் குறைப்பதற்காக தொழிற்சாலையின் முன்பக்க சுவரைத் திறத்தல்.

xi. உருக்குக் கம்பி உற்பத்தி செயற்பாடுகளின் போது ஏற்படுகின்ற புகையை புகைக்கூட்டினூடாக அனுப்புவதற்கான நடவடிக்கை எடுத்தல்.

எவ்வாறாயினும் வீடமைப்புத் திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடிக்கட்டிடத்திலிருந்து அவதானிக்கும் போது கல்வனைஸ் குழாய் உற்பத்திப் பிரிவிலிருந்து வெளிப்படுகின்ற புகை மற்றும் ஒலி என்பன பிரதேசம் முழுவதும் பரவுகின்ற நிலைமையொன்று அவதானிக்கப்பட்டது.

இலங்கை முதலீட்டுச் சபையின் கருத்துரை
''ஏற்றுக்கொள்ளப்படுகின்றது''

(ஆ) அதன் பிரகாரம் தொழிற்சாலை அவதானிக்கப்பட்டதன் பின்னர் அன்றைய தினமே அருகிலுள்ள வீடமைப்புத் திட்டத்தின் 05 ஆம் இலக்க வலயத்திற்குச் சென்று இந்த நிலைமை அவதானிப்புச் செய்யப்பட்டது. அதன் பின்னர் இந்த தொழிற்சாலையில் கல்வனைஸ் குழாய் உற்பத்திப் பிரிவின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடும் போது அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விளக்கமளித்தல்களின் பிரகாரம் தொழிற்சாலையிலிருந்து வெளியாகின்ற புகையின் தாக்கத்தை மேலும் குறைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்திருந்தனர் இது தொடர்பான ஏனைய அவதானிப்புக்கள் பின்வருமாறு இருந்தன.

i. உருக்குக் கம்பி உற்பத்தியின் போது உருவாகின்ற புகை 77 மீற்றர் அளவில் உயரமான புகைக் குழாயுடன் தொடுக்கப்பட்டு அதன் மூலம் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இலங்கை முதலீட்டுச் சபையின் கருத்துரை
''ஏற்றுக்கொள்ளப்படுகின்றது''

ii. இருந்த போதிலும், ஆரம்பிக்கப்பட்ட கல்வனைஸ் கைத்தொழில் பரவுகின்ற புகையை முழுமையாகக் கட்டுப்படுத்துவதற்காக கணக்காய்வுத் திகதியான 2015 ஆகஸ்ட் 23 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை முதலீட்டுச் சபையின் கருத்துரை
''ஏற்றுக்கொள்ளப்படுகின்றது''

<u>கல்வனைஸ் கைத்தொழிலிருந்து பரவுகின்ற புகையினைக் கட்டுப்படுத்துதல் தொடர்பாக பின்வரும் கருத்துரைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.</u>
கல்வனைஸ் கைத்தொழிலில் இருந்து பரவுகின்ற புகையினைக் கட்டப்படுத்துவதற்காக தொழிற்சாலையினால் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

- உருவாகின்ற புகையினை உறிஞ்சும் மூன்று குழாய்களினூடாக அனுப்புவதற்கான நடவடிக்கை எடுத்தல்.
- சிங்க் பாத் ஒன்றில் கழிவுப்பொருட்களை ஒன்றுசேர்த்தல்.
- ஒட்டுமொத்த செயற்பாடுகளையும் மீள தயாரித்தல்.

iii. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் மூலம் இந்த நிறுவனத்தின் காற்று வெளியாகும் முறைமைகளை மேம்படுத்துவதற்குரிய திட்டங்களை அமுல்படுத்துவதற்காக 2015 மார்ச் 12 ஆந் திகதி முதல் 06 மாத காலம் பெறப்பட்டிருந்த போதிலும் 2015 இன் இறுதியளவில் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் மூலம் மேற்கூறப்பட்ட நிர்மாணங்களுக்காக தேவையான திட்டங்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை முதலீட்டுச் சபையின் கருத்துரை
''ஏற்றுக்கொள்ளப்படுகின்றது''

iv. இந்த புகை தொடர்பாக உரிய முறைப்பட்டாளர்களின் வீடுகளின் அண்மையிலிருந்து அவதானிக்கும் போது வாயுமண்டலத்தில் மிகவும் உயரம் குறைந்த இடத்திலிருந்து புகை வெளியேறுகின்றமை அவதானிக்கப்பட்டது. ஒப்பீட்டு ரீதியில் பார்க்கும் போது வீடமைப்பு செயற்திட்டத்தைச் சுற்றி அந்த வீடுகளின் கூரை மட்டத்தில் அளவை வெளியேறுகின்றமையைக் காணக்கூடியதாக இருந்தது.

இலங்கை முதலீட்டுச் சபையின் கருத்துரை
''ஏற்றுக்கொள்ளப்படுகின்றது''

(இ) மேற்கூறப்பட்ட அவதானிப்பிற்கு மேலதிகமாக 2014 யூலை 24, 2014 ஒக்தோபர் 24 மற்றும் 2015 ஆகஸ்ட் 25 என்ற திகதிகளில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுடன் எங்களால் இந்த தொழிற்சாலை சுற்றாடலில் இருந்து வெளியேறும் ஒலி அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தும் எனக் கூறப்படுகின்ற 05 ஆம் இலக்க வலயத்தின் வீடுகள் இரவு நேரங்களிலும் அவதானிக்கப்பட்டதுடன் அதில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு இருந்தன.

i. இந்த அவதானிப்பிற்குரியதாக பெறப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்களின் பிரகாரம் தொழிற்சாலையின் ஆகக்கூடிய இயலளவில் செயற்பாடுகளில் ஈடுபடும் போது வெளிப்படுகின்ற இரைச்சல் உரிய வீடமைப்புத் திட்டத்திலிருந்து பார்க்கும் போது உரிய இரைச்சலின் தாக்கம் அங்கீகரிக்கப்பட்ட வீச்சில் இருந்தமை மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களினால் அவதானிக்கப்பட்டிருந்த விடயங்களாகும்.

ii. வீடமைப்பு உத்தேசத் திட்டத்தில் 05 ஆம் இலக்க வலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடிகளையுடைய வீடுகளிலிருந்து இது தொடர்பாக அவதானிக்கும் போது தொழிற்சாலையிலிருந்து வெளிப்படுகின்ற இரைச்சலின் தாக்கம் அதிகரிக்கின்றமை அவதானிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் வீடமைப்பு உத்தேசத் திட்டத்தின் வீடுகளில் மாடிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது அதன் தாக்கம் அதிகரிக்கின்றமையை தீர்மானிக்க முடியுமாக இருந்தது.

இலங்கை முதலீட்டுச் சபையின் கருத்துரை
''ஏற்றுக்கொள்ளப்படுகின்றது''

## 3.3 வீடமைப்பு செயற்திட்டத்தின் வீடுகளில் மாற்றங்களுக்கான அனுமதி பெறல்

வீடமைப்பு செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் போது தொழிற்சாலையின் பாதுகாப்பு பிரதேசம் அதற்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த பிரதேசங்களில் வீடுகளை நிர்மாணிக்கும் போது தொழிற்சாலையின் தாக்கத்தைக் குறைக்கும் வகையில் வீடமைப்புத் திட்டங்கள் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த வலயத்தின் வீடுகளில்

மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களுக்குரியதாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு இருந்தது.

(அ) மேற்கூறப்பட்ட பிரகாரம் தொழிற்சாலை பாதுகாப்பு பிரதேசத்திற்கு அடுத்துள்ள பாதுகாப்பு பிரதேசத்தையும் உள்ளடக்கியதாக இந்த வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பிப்பதற்காக அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன் அதில் தொழிற்சாலையின் எல்லைக்கு அருகில் ஒரு மாடியுடனான வீடொன்று மாத்திரம் நிர்மாணிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. வீடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களிலும் இந்த நிபந்தனையின் அடிப்படையில் உரிய வீட்டுத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்தது.

இலங்கை முதலீட்டுச் சபையின் கருத்துரை
''ஏற்றுக்கொள்ளப்படுகின்றது''

கடுவெல மாநகர சபையின் கருத்துரை
பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அவ்வாறிருக்கும் பொது வீடமைப்புத் தொகுதியில் விஷேடமாக தொழிற்சாலையின் தாக்கம் அதிகமாகக் காணப்பட்ட 05 ஆம் இலக்க வலயத்தின் வீடுகள் பல்வேறு மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. விஷேடமாக தொழிற்சாலையின் தாக்கம் தொடர்பான எதிர்ப்புக்கள் அதிகரித்த வகையில் மேற்கொள்கின்ற குடியிருப்பாளர்களின் வீடுகளைப் பரிசோதனைக்கு உட்படுத்திய போது அதில் ஒரு வீடு 03 மாடிகளையுடைய வீடொன்றாக இருந்ததுடன் அது தொழிற்சாலைக்கு சமீபமாக இருந்தமையினால் தொழிற்சாலையிலிருந்து ஏற்படுகின்ற தாக்கம் கூடுதலாக இருந்தமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இலங்கை முதலீட்டுச் சபையின் கருத்துரை
''ஏற்றுக்கொள்ளப்படுகின்றது''

கடுவெல மாநகர சபையின் கருத்துரை
பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மேற்கூறப்பட்ட வீட்டின் கட்டிடங்களை அபிவிருத்தி செய்யும் போது உரிய கட்டிடத் திட்டம், மூன்று மாடி கட்டிடமொன்றாக முன்னைய கடுவெல பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அவ்வாறு நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் இந்த மூன்று மாடிக் கட்டிடத்தின் கட்டிடத் திட்டத்தை அங்கீகரிக்கும் போது கடுவெல மாநகர சபையினால் வீடமைப்புத் திட்டம் ஆரம்பிக்கும் போது காணப்பட வேண்டிய நிபந்தனை எல்லைகள் கவனத்தில் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே மேற்கூறப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் இந்த வீடமைப்புத் திட்டம் தொழிற்சாலைக்கு அருகிலே அமைக்கப்பட்டமையினால் அதன் தாக்கம் மேலும் அதிகரித்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

இலங்கை முதலீட்டுச் சபையின் கருத்துரைகள்
''எவ்வாறாயினும் இலங்கை முதலீட்டுச் சபையின் மூலம் கடுவெல மாநகர சபையின் கௌரவ நகரபிதாவினால் மில்லேனியம் சிட்டி வீடமைப்புத் திட்டத்தின் வலய இலக்கம் 05 இல் மூன்று மாடி வீட்டிற்காக வழங்கப்பட்ட அங்கீகாரம் / சான்றுப்படுத்தல்கள் உறுதிப்படுத்தல்களுக்காக கோரப்பட்ட 2014 திசெம்பர் 16 மற்றும் 2014 ஏப்ரல் 11 ஆந் திகதிய கடிதங்களுக்காக இது வரையிலும் பதில் கிடைக்கவில்லை.

கடுவெல மாநகர சபையின் கருத்துரை
பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 தொழிற்சாலையினால் ஏற்படக்கூடிய சுகாதாரப் பிரச்சினைகள்

தொழிற்சாலை தொடர்பாக உரிய குடியிருப்பாளர்களினால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட ஏனைய விடயங்களான தொழிற்சாலையின் மூலம் ஏற்படுகின்ற வளி மாசுபடுதலின் காரணமாக வீடமைப்புத் திட்டத்தில் உயிர்வாழ்கின்ற குடியிருப்பாளர்களுக்கு பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றமை குறிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக கடுவெல மாநகர சபையின் சுகாதார வைத்தியப் பிரிவின் பொது சுகாதாரப் பரிசோதகரினால் அதற்குரிய விளக்கமளித்தல்கள் எழுத்துமூலம் பெறப்பட்டிருந்ததுடன் அதற்குரிய உத்தியோகத்தர்களினால் அறிக்கையிடப்பட்ட அவ்வாறான பல்வேறு நோய்கள் மற்றும் சுகாதார ரீதியிலான பிரச்சினைகள் எதுவும் இந்த வீடமைப்புத் திட்டத்தில் இருக்கின்ற குடியிருப்பாளர்கள் தொடர்பாக அறிக்கையிடப்பட்டோ அல்லது வெளிப்படுத்தப்படாதிருந்ததாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

இலங்கை முதலீட்டுச் சபையின் கருத்துரை
''ஏற்றுக்கொள்ளப்படுகின்றது''

கடுவெல மாநகர சபையின் கருத்துரை
பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முடிவுரை

தொடர்ச்சியாக உரிமை மாற்றப்பட்டிருக்கும் போது உள்நாட்டு முதலிட்டாளரினால் ஆரம்பிக்கப்பட்ட இந்த தொழிற்சாலை எதிர்காலத்தில் மேலும் விரிவடையக் கூடியதாகக் காணப்பட்டதுடன் தற்போது எழுந்திருந்த அந்த சுற்றாடல் பிரச்சினைகளை குறைப்பதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையினதும் இலங்கை முதலீட்டுச் சபையினதும் ஆலோசனையின் அடிப்படையில் அதன் முகாமைத்துவம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருந்த போதிலும், தொடர்ச்சியாக அருகிலுள்ள குடியிருப்பாளர்கள் தொழிற்சாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் வந்தனர்

இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் பெறப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்களின் பிரகாரம் வலய இலக்கம் 05 இல் அமைந்துள்ள உயர்ந்த கட்டிடங்களிலிருந்து உரிய பரிசோதனையை மேற்கொள்ளும் போது இரண்டு மாடி அல்லது அதற்கு மேலுள்ள மாடிகளையுடைய கட்டிடங்களில் இந்த சுற்றாடல் தாக்கம் ஏற்படும் வீச்சிற்கு அண்மையில் காணப்படுகின்றமை அறிக்கையிடப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் பின்வரும் நிலைமைகளில் இந்த தாக்கங்கள் மேலும் அதிகரிக்கின்றமை அவதானிக்கப்பட்டது.

i. தொழிற்சாலையின் இயலளவு காணப்படுகின்ற மட்டத்தை விட அதிகரித்து செயற்படும் போது,
ii. தொழிற்சாலைக்கு அருகில் பரிந்துரை செய்யப்பட்ட உயரத்தை விட கூடிய உயரமுடைய வீடுகள் அமைக்கும் போது,

மேலும் கடுவெல மாநகர சபையினால் இவ வீடுகளில் மேற்கொள்ளப்படுகின்ற மாற்றங்களுக்குரிய வீட்டுத்திட்டங்கள் அங்கீகரித்தல் சரியான கவனமின்றி மேற்கொள்ளப்பட்டமையினால் அங்கீகரிக்கப்பட்ட அளவினை விஞ்சி மாடிகளின் எண்ணிக்கையுடன் நிர்மாணங்கள் மேற்கொள்ளக்கூடியதாக இருந்ததுடன் இந்த குறைபாடுகளும் இப்பிரச்சினை நிலைமை மேலும் அதிகரிப்பதற்கு காரணங்களாக இருந்தன.

இந்த தொழிற்சாலை 1961 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், இப்பிரச்சினை மேலெழுவதற்கு காரணமான புதிய கல்வனைஸ் உற்பத்திப் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட 2012 ஆம் ஆண்டின் போதாகும். மேலும் வீடமைப்பு உத்தேசத் திட்டம் அங்கீகரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின்

அவதானிப்புக்கள் வேலைக்குழுவின் அறிக்கையின் பிரகாரம் லங்கா உருக்குக் கூட்டுத்தாபனத்தை எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்யும் போது இந்த வீடமைப்புத் திட்டத்தால் பிரச்சினைகள் ஏற்படக்கூடியதாக இருந்ததாக அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் கல்வனைஸ் உற்பத்திப் பிரிவு ஆரம்பிக்கும் போது அந்த செயற்திட்டத்தை அங்கீகரித்தல் தொடர்பான நடவடிக்கைகள் பிரதான அரசாங்க நிறுவனங்களினால் அதற்குரிய நிபந்தனைகள், வழிகாட்டல்கள் அல்லது பரிந்துரைகள் எதனையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் இந்த பிரச்சினைகளுக்காக முதலாவதாக முன்னிற்க வேண்டியிருந்த இலங்கை முதலீட்டுச் சபையின் சுற்றாடல் பிரிவினாலும் இவ்வாறான செயற்திட்டங்களை ஆரம்பிக்கும் போது ஏற்படக்கூடிய சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பாக போதியளவான கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. மேலும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் அதன் சுற்றாடல் விடயங்கள் ஆழமாக ஆய்வு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் அங்கே இவ்வாறான பாதுகாப்பு ஏற்படுத்தி வைத்திருப்பதன் அடிப்படை நோக்கம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியிருந்ததுடன் உரிய உள்ளூராட்சி நிறுவனத்தினால் கட்டிடத் திட்டங்கள் அங்கீகரிக்கப்படும் போதும், வீடமைப்பு செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் போதும் காணப்பட்ட நிபந்தனைகள் மற்றும் வரையரைகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டியிருந்தது. கட்டிடம் தொடர்பாக அந்த நிபந்தனைகளைப் பின்பற்றுதல் மற்றும் ஏற்பட்டுள்ள சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பாக தொழிற்சாலையில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் தேவைக்கேற்ற வகையில் துரிதமாக நிறைவேற்றுதல் இதன் அடிப்படைத் தேவையாக இருந்தது.